
தமிழ் அமுது

‘ஆர்’ கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு



முனைவர் இரத்தின வேங்கடேசன்

முனைவர் அரங்க மு. முருகையன்

முனைவர் தி. கு. இரவிச்சந்திரன்

முனைவர் சு. தமிழ்வேலு

‘ஆர்’ அனைத்திந்திய ஆராய்ச்சிக் கழகம்

சென்னை

"ஆர்" ஆட்சிக்குழுவினர்

சு.தமிழ்வேலு

அரங்க மு.முருகையன்

வே.திருநாவுக்கரசு

சு.பழனியாண்டி

இரத்தின வேங்கடேசன்

சிலம்பு நா.செல்வராசு

தாயம்மாள் அறவாணன்
(மதிப்புறு தலைவர்)

ISBN - 978-93-85349-80-5

Sprint Media, Chennai 73733 33162

❖ தமிழ் அமுது

❖ 'ஆர்' கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு

❖ ISBN No. 978-93-85349-80-5

❖ பதிப்பாசிரியர்கள் : முனைவர் இரத்தின வேங்கடேசன்
முனைவர் அரங்க.மு.முருகையன்
முனைவர் தி.கு.இரவிச்சந்திரன்
முனைவர் சு.தமிழ்வேலு

❖ முதற்பதிப்பு : 2025, திசம்பர்.

❖ பக்கங்கள் : 170

❖ விலை : ரூ. 200/-

❖ அச்சிட்டோர் : சபாநாயகம் பிரிண்டர்ஸ்
சென்னை - 600 099.
செல்: 7373333162 / 9282102533

அழகு நுகர்வு உளவியல் பார்வையில் அழகின் சிரிப்பு

முனைவர் **சு.விமல்ராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
அ.வ.அ.கல்லூரி (தன்.), மன்னன்பந்தல், மயிலாடுதுறை – 609 305.

பாவேந்தரின் அழகின் சிரிப்பில் பதிவாகியுள்ள காட்சிப் படிமங்களை நிறமிகளாகக் கருதி அழகு நுகர்வோர் உளவியல் அடிப்படையில் வெளிப்படுத்தும் கட்டுரை.

இலக்கியம் சாலச்சிறந்தது. முக்காலமும் வாழத்தக்க இலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளர் திட்டமிடுதல் இன்றித் தம்மை இலக்கியத்தின் வழியாக நகலெடுத்துக் கொள்கிறார். சமூகத்துக்காகத் தமக்கான முகத்தை வெளிக்காட்ட நினைத்தாலும் படைப்பு ஒரு படைப்பாளனின் உள்ளத்தைப் போட்டுடைக்கும். ஆழங்காற்பட்ட அறிவுவயப்பட்ட ஒருவரும் படைப்பில் தம்மை வெளிப்படுத்திக் கொள்வதிலிருந்து மறைத்துக்கொள்ள இயலாது. படைப்பின் சொற்கள், பொருண்மை, சொல்லும் முறைமை, உணர்வு வெளிப்பாடு என்னும் ஏதேனும் ஒன்றில் அவர் தம் உள்ளத்தைப் பதிவு செய்வர்.

மொழி, இனம், நாடு, மக்கள் என்னும் சிந்தனைப் பெருக்கில் நின்றவர் பாரதிதாசன். அழகைப் படைக்கும், படிப்பிக்கும் நோக்கில் அழகின் சிரிப்பைப் பதிவிட்டுள்ளார். பாரதிதாசனின் கவிதைகள் தீயாய் எரிந்து கனல் விடுகையில் தீக்குள்ளிருக்கும் ஒளியைப் படம் படிக்கும் அழகு வெளிப்பாட்டை ஒருங்கே படம் பிடித்துள்ளார். வறுமை, பெண் விடுதலை, சாதி எதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பு, சமூக நீதி, புரட்சி என்று பாடுகின்ற படைப்பாளனின் அழகை நுகரும் உள்ளம் குறித்து ஆராய வேண்டிய கடமை உள்ளது. அழகின் சிரிப்பு வழி வெளிப்படும் பாரதிதாசனின் அழகியல் உளவியலை இக்கட்டுரை ஆராய முயற்சி செய்கிறது.

அழகு–அழகியல்

அழகு அழகில் இல்லை. கண்ணோட்டத்தில் உள்ளது. பொருள் அழகாய் இருக்க வேண்டும் என்று நினைத்துப் படைப்பது. இந்த படைக்கப்பட்டப் பொருளை அழகாய் நினைத்து நுகர்வது. இந்த இரண்டு மன நிலைகளுக்கு இடையில்தான் அழகு உள்ளது. பொருள், மனிதர்கள் இன்னபிற யாவற்றின் அழகும் கொள்பவரின் சூழல், பயனின் தன்மை, ஏற்கும் மனநிலை, அம்மனநிலைக்குரியோரின் அகப்புறச் சூழல் இவற்றைக் கொண்டே அழகு முடிவெடுக்கப்படுகின்றது.

"சுரதந் தனில்இளைத்த தோகை; சுகிர்த
விரதந் தனில்இளைத்த மேனி; - நிரதம்
கொடுத்திளைத்த தாதா; கொடுஞ்சமரிற் பட்ட
வடுத்துளைத்த கல்அபிரா மம்" (ஔவையார், தனிப்பாடல்)

நாயகனோடு கூடி இயற்றிய சுரத அநுபவத்தாலே களைத்திருக்கின்ற நாயகியும், நன்மைதரும் விரதங்களை மேற்கொண்டதனால் இளைத்த பக்தரின் மேனியும், எக்காலமும் வறியவருக்குக் கொடுத்துக் கொடுத்துத் தன் செல்வம் இழந்து போன கொடையாளியும், கொடுமையான போரினிடத்தே பெற்ற வீரனின் வடுக்களும், பீடும் புகழும் குறித்துப் போரில் வீழ்ந்தோருக்கு நாட்டப்பெற்ற நடுகல்லும், சான்றோர் போற்றும் அழகான பொருள்களாகும்" என்பது பொருள். ஒன்று அழகியதாகக் கொள்ளப்படுவது, அதனைக் கொள்பவரின் மனநிலை யினை ஒட்டியும், செய்தவரின் சால்பினைக் கருதியும் அமைவதாகும் என்ற உண்மை விளங்கும்.

அழகு குறித்துச் சிந்திப்பதும் ஆராய்வதும் அதனைப் பகுத்துணர்வதும் தாம் அழகியல். "தாமஸ் அக்கினாஸ் என்பவர் புலன்கள் அல்லது மனத்தை இன்புறுத்துவது அழகியல் என்றார். 19 ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு நாவலாசிரியர் ஸ்டெண்டால் என்பவர், மகிழ்வூட்டக்கூடியது என்றார். கீட்சு உண்மையே அழகு என்றார். பொதுவாக அழகென்பது காண்போர் கண்ணைப் பொறுத்தது என்பர். காண்பது கண்ணென்னும் பொறியானாலும் உணர்வது கருத்தென்னும் புலனேயாதலின் உள்ளம் உணர்வதே அழகாகிறது" (முனைவர் மீனாட்சி முருகரத்தினம், அழகியல், ப.11) என்ற அறிஞர்களின் கூற்றுப்படி படைப்பின் பாடுபொருள் எத்தன்மைத்தா யினும் அது எடுத்தியம்பும் முறையில் அழகுபட வெளிப்படுத்துவது கலையைக் கலையாக மட்டும் பார்க்கும் கண்ணோட்டத்தில் அமைவது. ஒடுக்கப்பட்டோர் வாழ்வியலைப் படைக்கும்போதும் அதில் தலித் அழகியல் என்ற பார்வை இத்தகையதாக இருக்கின்றது.

அழகு நுகர்வு உளவியல்

அழகை அல்லது அழகின்மையை நுகரும் நிலையில் அது அழகாய் உருவம் கொள்கின்றது. அவ்வாறான அழகையும் அழகின்மையும் கொள்ளும் உள்ளத்தின் தன்மை ஒன்று உள்ளது. அத்தகைய உள்ளத்தின் கொள்ளும் திறனே எப்பொருளையும் அழகாகவும் அழகின்மையாகவும் ஆக்குகின்றது.

அழகு நுகர்வு உளவியலை ஆங்கிலத்தில் Aesthetic psychology என்பர். அழகை நுகரும் உள்ளத்தின் தன்மையை அது ஆராய்கின்றது. அழகியலின் உளவியல் என்பது "கலைப்படைப்புகளுடனான நமது தொடர்புகள்; ஓவியங்கள், இலக்கியம், கவிதை, இசை, திரைப்படங்கள்

மற்றும் பல்வேறு நிகழ்வுகளுக்கான எதிர்வினைகள்; அழகு மற்றும் அழகின்மைப் பற்றிய நமது அனுபவங்கள், நமது விருப்பத்தேர்வுகள் மற்றும் வெறுப்புகள்; மற்றும் நமது உலகில் உள்ள கருத்தியல்களைப் பற்றிய நமது அன்றாட உணர்வுகள் - இயற்கை மற்றும் கட்டமைக்கப்பட்ட சூழல்கள், வடிவமைப்பு பொருட்கள், நுகர்வோர் பொருட்கள் போன்ற அனைத்தையும் மக்கள் அணுகும் முறையிலேயே அமைந்துள்ளது" (ஸ்மித் - டினியோ, 2014, பக். 3) என்ற அறிஞர் பெருமக்களின் கூற்றுப்படி கலைப்படைப்புகள் எத்தன்மைத்தாயினும் அல்லது எவ்வடிவினதாயினும் அவற்றை அணுகும் முறையில் அதன் தன்மையை உணரும் நிலையில் அவை அழகு பெறுகின்றன.

படைப்பை நுகரும் நிலை, புறச்சூழலை நுகர்ந்து அவற்றைப் படைப்பாக்கும் நிலை என்ற இரண்டு கண்ணோட்டங்களின் நாம் இந்த அழகு நுகர்வு உளவியலை உற்றுநோக்க வேண்டியுள்ளது. படைப்பை நுகரும் உளவியல் மட்டுமன்று பிறவற்றை நுகர்ந்தே படைப்பாளர் படைக்கின்றார். ஆகவே, அவரது உளவியல் படைப்பில் நிறைந்திருக்கின்றது. அவர் படைத்திருக்கும் படைப்பிலிருந்து அதன் அழகு நுகர்வைப் புரிந்து கொள்ளமுடியும். படைப்பாளர் நுகர்ந்தோராய் இருந்து பெற்ற அனுபவத்தைப் படைக்கிறார். ஆகவே, அவரும் நுகர்வோர் மனநிலையைப் பெற்றிருக்கிறார். பாரதிதாசனின் நுகர்வு நிலையை இவ்வாறே அழகின் சிரிப்பிலிரிந்து நாம் பார்க்கவேண்டியுள்ளது.

நுகர்வு நோக்கிலான அழகு

பாரதிதாசன் 16 தலைப்புகளில் பாடுகிறார். அழகு, கடல், தென்றல், காடு, குன்றம், ஆறு, செந்தாமரை, ஞாயிறு, வான், ஆல், புறாக்கள், கிளி, இருள், சிற்றூர், பட்டனம், தமிழ் என்னும் தலைப்புகள் பாடுபொருள். இவர் தம் அனுபவங்களில் பலவற்றை நுகர்ந்திருந்தாலும். தாம் தலையாயதாய் உணர்ந்தவற்றைத் தலைப்பாக்கியிருக்கிறார். அழகில் தொடங்கித் தமிழில் நிறைவடைகிறது. அழகு எது என்னும் கேள்வியைத் தொடுப்பின் காலை நேரக் கடலில் இருந்து தொடங்கி மாலை கூடடையும் ஞாயிற்றின் வலம் வருதலைச் சுட்டுகின்றார். "கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்.... மாலையிலே மேற்றிசையில் இலகுகின்ற மாணிக்கச் சுடரிளவள் இருந்தாள்" (பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப.5) கடலில் இருந்து புறப்பட்டு அவரது எண்ணம் சாலைக்கு வருகின்றது. அதை ஆலஞ்சாலை என்பதுடன் அங்கு வாழுகின்ற பறவைகளுடன் இணைக்கின்றார். கிளைகள் தோறும் கிளிகள் வேண்டும் என்னும் வேண்டுகோள் அதில் நிரம்பியுள்ளது.

ஆங்கிலத்தில் empathy என்றழைக்கப்பெறும் பரிவு உளவியலே கிளைதோறும் பறவை நிரம்பியிருக்கும் எண்ணம். கிளிகளாக

மாற்றம்பெற்ற அகம் பாரதிதாசனுடையது. பின்னர்ச், 'சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்' (பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப.5) என்ற இடத்தில் extensions of love psychology வெளிப்படுகின்றது. இந்த அன்புணர்வின் நீட்சியே பாரதிதாசனை வழிநடத்துகின்றது.

அழகு தங்கியிருக்கும் இடங்கள் முறையே கடலில் தொடங்கி வலம் வருகின்றன. தாம் தம் குழந்தைப் பருவம் முதல் உள்வாங்கிய இயற்கையை முறைப்படுத்தி எடுத்தியம்புகையில் அதன் வைப்புமுறை சிறப்பு வாய்ந்தது.

உளவியல் நிலையில் சமூகத்தில் அல்லது தாம் சார்ந்து வாழுகின்ற எவ்வுயிரினத்தின் மீதும் அன்பு கொள்ளும் உரிமை அனைவருக்கும் உள்ளது. பிறருடைய துன்பம் கண்டு மனம் இளகுதல் அன்பின் உயர்நிலை. அத்தகைய அன்புகூறும் உளவியல் தன்மை அழகின் சிரிப்பின் பல இடங்களில் மிகுந்துள்ளது. ஆங்கிலத்தில் இதனை, Psychological altruism என்பார்கள். 'நறுமலரைத் தொடுப்பாளின் விரல் வளைவில்' 'அடடே செந்தோள் புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும் புதுநடையில் பூரித்தாள்' 'புழுங்கிய மக்களைக் குளிர் காற்று புதுமை செய்யும்', 'உலைத்தீயில் உருகும் கொல்லனுக்குக் குளிர்ச்சி தரும் தென்றல்' என்றெல்லாம் தாம் பார்க்கும் காட்சிகளில் அன்பின் கண்ணோட்டத்தைப் பதிவு செய்கிறார்.

நுகர்வுப் பொருள்சார் உளவியல்

பாரதிதாசன், அழகு விளக்கொளியில் உள்ளது என்ற நேர்மறை எண்ணத்தைப் பதிவு செய்கிறார். Positive Psychology என்னும் நேர்மறை உளவியலின் கூடுதல் பதிவாக, 'நகையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்'(பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப.5) என்கிறார். நல்லழகு வசப்பட்டால் துன்பம் இல்லை. எதையும் உள்ளதென்று கொள் அது இருக்கும் என்னும் மன நிலையைச் சுட்டும் இவர், அழகு என்று உணரும் உணர்வைப் பெண்பாலாக்கியிருக்கிறார். தாம் ஆண்பாலா யிருத்தலால் தம் எதிர்பாலின பெண்பாலை அழகாயிருக்கும் இடங்களிலெல்லாம் இருத்திப் பார்க்கும் பக்குவம் (High emotional intelligence includes emotional recognition of emotions of the self and others - Daniel Goleman, Emotional intelligence, Bantam Books, 1995, P.127) அன்புகொண்டோரை ஏற்பளிப்பு செய்யும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துகின்றது.

அழகியல் உளவியலின் (Aesthetic Psychology) ஒரு முக்கிய அங்கம், பார்ப்பனவற்றை நேர்மறை எண்ணமுடன் பார்க்கப்பழகுதல். அழகின் சிரிப்பின் அனைத்திலும் அப்பார்வை மிகுந்திருக்கின்றது.

அழகின் சிரிப்பில் பாடப்பட்டுள்ள இவை அனைத்தும் இயற்கைப்பொருள். அழகு இயற்கையில் உள்ளது. உயிர் ஏணியில் (ladder of being) மானுட இனம் ஆளுமைப் பொருந்தியதாக இருந்தாலும்

இயற்கையை முறையாகக் கொள்ளும், இயற்கைக்குக் கொடுக்கும் அறிவு கொண்டு இயங்கும் சம அளவு வாழ்வியல் முறையே மனித இனத்தின் ஆளுமையை நிலையானதாக வைத்திருக்கும். நிலையானதென்பது மாற்றத்திற்கு உரியது. இவ்வாறு இயற்கையையும் அதனூடே மனித வாழ்வையும் பாரதிதாசன் அழகின் சிரிப்பென்று கொள்ளுதலே சூழலியல் உளவியலென்று (Ecology psychology) கொள்ளல் வேண்டும்.

நிற நுகர்வு உளவியல்

அழகின் சிரிப்பில் நேரிடையாக நிறப்பெயர் சுட்டுமிடங்கள் பயின்று வருகின்றன. கருவானம்/ கருங்குரங்கு/ கரியபாம்பு/ கருங்கொண்டை/ கரியகூந்தல்/ காரிருள்/ கீரியின் உடல் வண்ணம்/ செக்கச்செவேல்/ செங்கதிர்(2)/ செங்காந்தள்/ செங்கை/ செந்தணல்/ தணல்நிறம்/ செம்பழம்/ செம்மை/ செம்போத்து/ செவ்வானம்/ தங்கக்கட்டி/ தங்கத்தட்டு/ தங்கச்சரிவு/ தங்கத்தூற்றல்/ தங்கப்பூக்கள்/ நீலப்பூ(2)/ நீலமுக்காடு/ நீலவான்/ நீலச்சிறகு/ பச்சைப்பட்டு(2)/ பச்சிலை(3)/ பச்சைத்தட்டு/ பச்சையிலைத்தட்டு/ பச்சை/ பச்சைமேனி/ பச்சை இதழ்/ பசும்புல்/ பொன்னிறம்/ பொன்வறி/ பொன்னுடை/ பொன்னொளி/ பொன்துகள்/ வெண்சங்கு/ வெண்பட்டு/ வெள்ளைமுத்து/ வெண்மைக்கொம்பு/ வெண் தாழை/ வெள்ளி அன்னம்/ வெள்ளலை/ வெண்ணெய்/ வெண்முத்து என்றெல்லாம் சுட்டுமிடத்தில் கருமை 6, செம்மை 10, பொன் நிறம் 5, தங்கம் 5, நீலம் 5, பச்சை 11, வெண்மை 9 இடங்களில் இடம்பெற்றுள்ளன. செந்நிறத்தைக் கூடுதலான இடங்களில் பயன்படுத்தியுள்ளார். இந்நிறம் புரட்சியின் நிறம். மஞ்சள் எளிதில் உணரும் வண்ணம். அதைப் போல் பொன்னிறத்தைத் தங்கம் என்னும் சொல்லாடலுடன் 10 இடங்களில் பயன்படுத்தும் கவிஞர் சிவப்பை 11 இடங்களில் சுட்டுகின்றார். சூரியனின் நிறமும் வெளிப்படையாகத் தீயின் செம்மை. இயற்கை இந்நிறத்தை அள்ளித் தெளித்திருக்கிறது. அதை உள்வாங்கும் நிலையில் பாரதிதாசன் வெளிப்படுகின்றார். செம்மை 'புரட்சி, வறுமை, வெறுமை, தீரம், நிலைத்தத்தன்மை, பண்பு, எதிர்பார்ப்பு, அனுபவம் ஆகியவற்றை உணர்த்துகின்றது (Neethi Kwoshik, The International Journal of Indian Psychology, Apr-Jun.2018) மேலும், பொன்னிறம், வெண்ணிறம் ஆகியவற்றைச் சமமாகப் பயன்படுத்தியுள்ளார். உயர்வு, நலம், வெற்றி, செழிப்பு, நிலைப்பாடு என்பனவற்றை உணர்த்தும் பொன்னிறமும், அன்பு, அறிவு, தூய்மை, எளிமை, பிறர்நலம், தனிமை, தொடக்கம் ஆகிய உணர்வுகளை உணர்த்தும் வெண்மை ஆகிய நிறத்தையும் பாரதிதாசன் வெளிப்படுத்துகின்றார். செந்நிறத்தை அடுத்து வெண்ணிறமே அவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அழகு

வெளிப்படுமிடத்தில் பாரதிதாசனும் தம் உள்ளத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

முடிவுரை

அழகு பொருளில் இல்லை. பொருளைக் கொள்ளும் மனத்தில் உள்ளது. பிறரால் அழகெனக் கொள்ளப்படும் பொருள் மற்றொருவரால் அழகின்மையாக எடுத்துக்கொள்ளப்படும். பொருளின் அழகு கொள்ளப்படும் மானுடர்களின் எண்ணம், அகப்புறச்சூழல் இவற்றைக் கொண்டு வேறுபடுகின்றது.

அழகின் சிரிப்பு 16 பொதுப்பொருள்களைப் பாடுகின்றது. இவைகள் அனைத்தும் இயற்கைப்பொருள். சூழலியல் உளவியலாகக் கொள்ளப்பெறும் சுற்றுச்சூழல் அன்பு அழகின் சிரிப்பில் உள்ளது. அவ்வன்பே இயற்கையை அழகாகக் கொள்ளுகின்றது. அழகு வெளிப்படுமிடங்களைப் பெண்பாலுக்குக் கொடுக்கும் பாரதிதாசனின் எண்ணம் அன்புகொண்டோரை ஏற்பளிப்பு செய்யும் High emotional intelligence பண்பை வெளிப்படுத்துகின்றது. empathy என்றழைக்கப்பெறும் பரிவு உளவியலே கிளைதோறும் கிளிகளைத் தேடுகின்றது.

இளகிய மனம் உடைமையைப் (Psychological altruism) பல இடங்களில் பாரதிதாசன் வெளிப்படுத்துகின்றார். நேர்மறை உளவியல் அழகியலின் அடிப்படை. அத்தகைய Positive Psychology அழகின் சிரிப்பை நிறைவு செய்கின்றது. சூழலியல் உளவியல் (Ecology psychology) பண்பே பாரதிதாசனை இத்தகையப் படைப்பை உருவாக்கத் தூண்டியுள்ளமை வெளிப்படுகின்றது. நிற உளவியலில் செம்மையும் வெண்மையும் பாரதிதாசனை அதிகம் ஈர்த்துள்ளது.

துணைநூற்பட்டியல்

- பாரதிதாசன், அழகின் சிரிப்பு, மின்னூலாக்கம்: சீ.ரபாவஜேஸ்வேரி, வெளியிடு : FreeTamilEbooks.com
- முனைவர் மீனாட்சி முருகரத்தினம், அழகியல், உலகத்தமிழ் ஆராய்ச்சிக்கழகம், தரமணி, சென்னை, திசம்பர், 1992
- புலியூர்க் கேசிகன், ஔவையார் தனிப்பாடல்கள், மங்கை வெளியீடு, சென்னை, 2010
- Daniel Goleman, Emotional intelligence, Bantam Books
- Neethi Kwoshik, The International Journal of Indian Psychology, Apr-Jun.2018)